மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவு சூழ்ச்சி மற்றும் சுரண்டல் என்னும் பேராசையால் உந்தப்படாமல், உயிரினங்களுக்கும் படைப்புகளுக்கும் இடையிலான தெய்வீக நல்லிணக்கம், மரியாதை மற்றும் அக்கறையினால் பாதுகாக்கப்படட்டும்

திருத்தந்தை பிரான்சிஸ்

### இன்றைய இறைவார்த்தை:

சாலமோனின் ஞானநூல் 9: 13-18

திருப்பாடல்: 90: 3-6, 12-14, 17

பிலமோன்: 9-10, 12-17

லூக்கா 14: 25-33

பலமனித நடவடிக்கைகள் படைப்பின் அழிவுக்குப் பங்களித்துள்ளன. அதிகப்படியாக வளங்களைப் பிரித்தெடுத்தல், மற்றும் நுகர்வு, காடுகளை அழித்தல், மாசுபாடு, வீணாக்குதல் மற்றும் பசுமை இல்ல வாயுக்களை உற்பத்தி செய்வது, இதுபோன்ற அழிவுகரமான செயல்களால் பூமியை ஆபத்தான அளவிற்கு வெப்பமயமாக்குகின்றன. இவை வன்முறை மற்றும் அனைத்துப் படைப்புகளுக்கும் எதிரான போருக்கு நிகரானவை. பூவுலகு வன்முறையால் நிறைந்திருந்தது.(தொடக்கநூல்: 6:1)

எசாயா 32:14-18 கூறப்படுவதுபோல நீதி சாத்தியமாக்கப்படும்போது கடவுளின் மக்கள் அமைதிசூழ் இடங்களில் வாழும் ஒரு கற்பனைக்காட்சி விவரிக்கப்படுகிறது. நேர்மை அமைதிக்கு வழிவகுத்து, நிலத்தை மீட்டெடுக்கிறது. அனைத்து உயிரினங்களுடனும் ஒப்புரவு உண்மையான நீதி ஆகியவற்றின் மூலம் மட்டுமே படைப்பு அமைதியைக் காணும்.

ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளைக் கொண்டுள்ளது. (1 செப்டம்பர் 2025- 31ஆகஸ்ட் 2026) கருப்பொருள்: தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் மறுஉருவாக்கத்தின் எதிர்நோக்கை ஏற்படுத்துதல். மறு உருவாக்கம் என்பது படைப்புடன் சமரசம் ஏற்படுத்தும் ஒரு பகுதியாகும். மற்றும் மீள்தன்மையின் முக்கிய அங்கமாகும்.

இன்றைய திருப்பாடல் நாம் புல்லைப் போன்றவர்கள் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. கிறிஸ்துவின் சீடர்களாக இருப்பதற்கு நமது உடைமைகளை நாம் விட்டுவிடத் தயாராயிருக்குமாறு நற்செய்தி நமக்குக் கூறுகிறது. திருப்பாடலும் நற்செய்தியும் இந்த உலகப் பொருளின்மீது பற்று கொள்ளக்கூடாது என்ற அடிப்படையை செய்தியை நமக்குக் சொல்கின்றன. மிக அடிப்படையான தேவைகள்கூட இல்லாத மக்கள் இருந்தாலும், முடிவில்லாத பயன்பாடு மற்றும் வீணாக்குதல் இதுபோன்ற சுழற்சியை ஊக்குவிக்கும் வாழ்க்கை முறைக்கு அடிமையாகி வளங்கள் சமமற்ற முறையில் பயன்படுத்தப்படுகிறது. வாரத்திற்கு இருமுறை இறைச்சி உணவுகளைத் தவிர்ப்பது, ஒருமுறைமட்டுமே பயன்படுத்தி எறியப்படும் பொருட்களை மறுப்பது, தண்ணீரைச் சேமிப்பது அல்லது உணவுக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிப்பது போன்ற சிறிய தியாகங்களைச் செய்வதற்கோ அல்லது சிறிய சிரமங்களை அனுபவிக்கவோ நாம் தயாராக இல்லை.

இந்தப் படைப்பின் பருவத்தில் அனைத்துப் படைப்புகளுடனும் படைத்தவருடனும் ஒப்புரவாகுவோம். மனிதர்களாகிய நாம், அழைக்கப்பட்ட அன்பு பொறுப்பாளர்களாகவும், மேய்ப்பர்களாகவும் இருக்கமுடியும் என்ற எதிர்நோக்கை வாழ உறுதியெடுப்போம்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 36/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 23 ஆம் ஞாயிறு | 7 செப்டம்பர் 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:
சூழலியல் பணித்துவம்
விரயத்தைத் தவிர்க்க அழைப்பு – உடனே செயல்படுதல்

# படைப்புகளுடன் அமைதி

செப்டம்பர் 1 ஆம் தேதியை படைப்பின் பராமரிப்பிற்கான உலக இறைவேண்டல் நாளாக திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்தார். இது ஆண்டுதோறும் செப்டம்பர் 1 முதல் அக்டோபர் 4 வரை நடைபெறும் படைப்பின் பருவத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது. (சுற்றுச்சூழலை ஊக்குவிப்பவர்களின் பாதுகாவலரான புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழா) இந்த ஆண்டு படைப்பின் பருவத்தின் கருப்பொருள்: "படைப்புகளுடன் அமைதி" (seasonofcreation.org.)

